<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

OS. 272/2023

2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் நாள் .வா.த.சா 2-ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. .ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | வயது | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | கேசவபடையாட்சி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எனது மகனுடன் தான் வசித்து வருகின்றேன். அவர் எனது 3 வது மகன். அவர் பெயர் ரத்தினசபாபதி. இந்த வழக்கு சொத்து உள்ள சிலம்பிநாதன் பேட்டை கிராமத்தில் எனக்கு சொத்துக்கள் எதுவும் கிடையாது. நடுவீரப்பட்டு கிராமத்தில் எனக்கு சொத்து உண்டு. முந்திரிதோப்பு வெள்ளக்கரையில் உள்ளது, நிலமும் வெள்ளக்கரையில் இருக்கிறது. வீடு நடுவீரப்பட்டில் உள்ளது. நடுவீரப்பட்டில் நான் வசிக்கவில்லை. எனது பெரிய மகன் வசிக்கிறார். அவர் பெயர் மணிமாறன். வாதியும், பிரதிவாதியும் பல கிரையம் செய்த விவரம் எனக்கு தெரியாது. அவர்கள் செய்யவில்லை. குமலங்குளம் கிராமத்திற்கும், சிலம்நாதன் பேட்டை கிராமத்திற்கு சுமாராக 2 கிலோ மீட்டர் இருக்கும். என் கூட பிறந்தவர்கள் மொத்தம் 5 பேர், நான் 2 வது. எனக்கு குடும்ப சொத்து உண்டு. அந்த சொத்துக்கள் பாகம் பிரிந்து விட்டது. என் அப்பா, அம்மா இருக்கும் போது சொத்து பிரிந்துவிட்டது. எங்களுக்குள் பிரிந்த கொண்ட சொத்துக்களுக்கு பதிவு செய்யப்பட்ட ஆவணம் உண்டு. எனக்கு முந்திரித்தோப்பு

மற்றும் நிலம் கொடுத்தார்கள். எவ்வளவு விஸ்தீரிணம் என்றால் 88 செண்ட் மற்றும் 1 ஏக்கர் ஒன்று, ஒரு வீட்டு மண் மற்றும் 33 செண்ட் கொடுத்தார்கள். வழக்கு சொத்தில் சிலம்பிநாதன் பேட்டை மற்றும் நடுவீரப்பட்டு கிராமத்தில் எனது உறவினர்கள் இருக்கிறார்கள். எனக்கும் எனது சகோதரர்களுக்கும் பேச்சு வார்த்தை உண்டு. எனக்கும் பிரதிவாதி குப்புசாமி, சிவஞானம், சக்கரபாணி ஆகியோருக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் ஆமாம். வாதியுடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தையில் தான் உள்ளேன். எங்க குடும்பத்தில் எழுத்து மூலமாக பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்பதும் வாய்மொழியாக பாகம் பிரிந்து கொள்வது தான் எங்களுக்கு நடைமுறை வழக்கம் என்பதும் அதேபோல் தான் வாதிக்கும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் வாய்மொழி பாகமானது என்றால் சரியல்ல. வாய்மொழி பாகமாக பிரிக்கப்பட்ட 15 செண்டை தான் வாதியின் மனைவி வழி உறவினருக்கு நான் விற்றேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் கொடுத்த சொத்து பத்திரத்தை தாக்கல் செய்தால் வாய்மொழியாக ஆனது என்று தெரியவரும் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு நெடுங்கால நண்பர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிராமண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள புலியூரில் உள்ள 1 ஏக்கர் 20 செண்ட் சொத்து விற்பனை கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்திடவில்லை என்று சொன்னால் சரிதான். எனது பெரிய மகன் சித்தப்பா கலியமூர்த்தி வீட்டிற்கு பக்கத்தில் வசிக்கிறார். வாதி மற்றும் பிரதிவாதியின் வீட்டிற்கு அருகில் எனது பெரிய மகன் வசிக்கவில்லை. வாதி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கிடையே பாகம் ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. நான்

விவசாய தொழில் செய்கிறேன். துரைங்ரங்கத்திடமிருந்து பணம் வாங்கிக்கொண்டு பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை-இல்லை.